DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai.

**CC.NO.600337/2019**

Deposition of LW6 Examined as PW4 Date: 20.01.2026

| | |
|---|---|
| Name | டாக்டர். ஜான்சிராணி |
| Father's/Husband's Name | கவியரசன் |
| Village | மயிலாடுதுறை |
| Taluk | |
| Age | 52/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 20.01.2026

(Accused absent. Petition u/s. 355 BNSS filed and allowed )

**முதல் விசாரணை**

நான் தற்போது குத்தாலம் அரசு மருத்துவமனையில் தலைமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.08.2019 ம் தேதி இரவு 11.45 மணியளவில் நான் மயிலாடுதுறை அரசு பெரியார் மருத்துவமனையில் அவரச சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபோது என்னிடம் 75 வயது மதிக்கத்தக்க பாப்பாத்தி, க/பெ, வைத்தியநாதன் என்பவரை அவருடைய மருமகள் வசந்தி என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவர் சுயநினைவின்றி இருந்தார். அவருடன் வந்த மருமகள் வசந்தியை நான் விசாரித்தபோது பாப்பாத்தியை நேற்று இரவு 11.00 மணிக்கு அவருடைய மகன் கட்டையாலும் கையாலும் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதனை செய்தபோது அவரின் மூக்கின் இரண்டு துளைகளிலும் ரத்தம் கட்டியிருந்தது. காய்ந்த ரத்தம் வாய்ப் பகுதியில் காணப்பட்டது. உடல் முழுவதும் சிராய்ப்பு காயங்கள் காணப்பட்டது. அவருக்கு நான் முதலுதவி சிகிச்சை அளித்து உள் நோயாளியாக அனுமதித்தேன். அவர் சொந்த விருப்பத்தின் பேரில் விடுவிக்கப்பட்ட காரணத்தினால் என்னால் காயச்சான்று வழங்க இயலவில்லை. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் விபத்து பதிவேடு நான் வழங்கியதுதான். **(விபத்து பதிவேடு அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** மேற்சொன்ன விதத்தில் மேற்சொன்னவாறு மேற்கண்ட ஆயுதங்களால் தாக்கியிருந்தால் மேற்கண்டவாறு காயம் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் வாய்ப்புண்டு. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

காயம் பட்ட நபருக்கு ஏற்பட்ட காயமானது மாடிப்படியில் இருந்து கீழே தடுமாறி விழுந்தால் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் உருண்டு விழுந்தால் ஏற்பட வாய்ப்புள்ளது. உள்நோயாளியாக மேற்படி நபர் சிகிச்சை பெற்றாரா என்றால் நான் உள்நோயாளியாக அனுமதித்து தான் சிகிச்சை அளித்தேன், ஆனால் அவர் சிகிச்சைக்கு ஒத்துழைக்காமல் மருத்துவ ஆலோசனைக்கு எதிராக மருத்துவமனையில் இருந்து சென்று விட்டார்.

20/1/2026

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது

20/1/26

நீதித்துறை நடுவர் எண். I,
மயிலாடுதுறை